நெஸ்லே லங்கா பீஎல்சி செய்தி வெளியீடு
கொழும்பு: 27 பெப்ரவரி 2017

**இலங்கை மாணவர்களின் அமோக வாக்குடன், தொடர்ந்து மூன்றாவது ஆண்டாகவும் 'வருடத்தின் மிகச் சிறந்த பான வகை வர்த்தகநாமம்' என்ற தனிச்சிறப்பை நெஸ்லே *மைலோ* சம்பாதித்துள்ளது**

பிரபல பான வகை வர்த்தகச் சின்னமான மைலோ, இலங்கை கிரிக்கட் அணித் தலைவரான அஞ்சலோ மத்தியூஸ் அவர்களின் ஏற்பிசைவுடன், மீண்டும் ஒரு தடவை, இலங்கை மாணவர்களின் அமோக வாக்குகளை சம்பாதித்து, 2016 ஆம் ஆண்டின் 'மாணவர் விரும்பும் மிகச் சிறந்த பான வகை வர்த்தகநாமம்' என்ற தனிச்சிறப்பை தொடர்ந்தும் தக்கவைத்துள்ளது. தொடர்ந்து மூன்றாவது ஆண்டாகவும் இந்த விருதை *மைலோ* வென்றுள்ளதுடன், அந்த உற்பத்தியின் தரத்தின் மீது இலங்கை நுகர்வோர் கொண்டுள்ள அசைக்க முடியாத நம்பிக்கையை இது வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

டி.எஸ். சேனநாயக்க கல்லூரி தனது வருடாந்த மாணவர் வர்த்தகச்சின்ன விருதுகள் நிகழ்விற்காக மேல் மாகாணத்திலுள்ள 9,000 பாடசாலை மாணவர்கள் மத்தியில் முன்னெடுத்திருந்த ஒரு கருத்துக்கணிப்பின் பெறுபேறுகளின் அடிப்படையில் இந்த வெற்றி விருது வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

*''ஊட்டச்சத்து மற்றும் சக்தி ஆகியவற்றை வழங்கவேண்டும் எனும் வர்த்தகச்சின்னத்தின் பிரதான உறுதிமொழியுடன், சிறுவர்கள் தமது ஆற்றல்களை முழு அளவில் வெளிக்கொணர்வதை நாம் ஊக்குவிக்க வேண்டும் என்பதில் மைலோ மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளது. பாடசாலை விளையாட்டு நிகழ்வுகள் மற்றும் ஏனைய பல்வேறு நிகழ்வுகளுக்கு அனுசரனைகளை வழங்குவதன் மூலமாக தீவிரமாக பங்காற்றிவருகின்ற மைலோ, சிறுவர்கள் தமது திறமைகளை உள்நாட்டிலும், சர்வதேசரீதியாகவும் வெளிக்காண்பிப்பதற்கு உதவி வந்துள்ளது,''* என்று நெஸ்லே லங்கா நிறுவனத்தின் பான வகை உற்பத்திப் பிரிவுக்கான பிரதித் தலைமை அதிகாரியான நோர்மன் கன்னங்கர அவர்கள் குறிப்பிட்டார். *''தொடர்ந்து மூன்றாவது ஆண்டாகவும் 'வருடத்தின் மாணவர் விரும்பும் மிகச் சிறந்த வர்த்தகநாமம்' என பெரும்பாலான மாணவர்களின் வாக்குகளை சம்பாதித்துள்ளமை, சிறுவர்கள் மிகச் சிறப்பாகச் செயற்படுவதற்குத் தேவையான ஊட்டச்சத்து, சக்தி மற்றும் ஊக்குவிப்பு ஆகியவற்றை அவர்களுக்கு வழங்குவதற்கு இந்த வர்த்தகச்சின்னம், தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்ற முயற்சிகளுக்கான ஒரு அடையாளமாகும். இந்த இனங்காணல் அங்கீகாரமானது, நுகர்வோர் மைலோ மீது வைத்துள்ள விசுவாசம் மற்றும் நம்பிக்கையை காண்பிக்கின்றது. உலகில் உள்ள உணவு உற்பத்தி நிறுவனங்கள் மத்தியில் மிகவும் பாரிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி வலையமைப்பைக் கொண்டுள்ள ஒரு நிறுவனத்திடமிருந்து, அதன் சர்வதேச அளவிலான தொழில்நுட்ப நிபுணத்துவத்தின் அனுகூலத்துடன் தயாரிக்கப்பட்டு வருகின்ற ஒரு வர்த்தகச்சின்னமாக மைலோ திகழ்ந்து வருகின்றது,''* என்று தொடர்ந்தும் குறிப்பிட்டார்.

உணவுப் பாதுகாப்பு மற்றும் தரத்திற்கு நெஸ்லே நிறுவனம் எப்போதுமே முதலிடம் கொடுத்து வருகின்றது. மைலோ உடனடியாக பருகக்கூடிய உற்பத்தியானது (RTD - Ready-To-Drink), UHT (அதியுயர் வெப்பநிலையில் பதப்படுத்தும்) நடைமுறைக்கு உள்ளாக்கப்படுவதுடன், பாலில் அடங்கியுள்ள ஊட்டச்சத்து நன்மைகள் எதுவும் இழக்கப்படாது, அவற்றைப் பேணியவாறு, மிகச் சிறந்த உற்பத்தியாக அது நுகர்வோரை எட்டுவது உறுதி செய்யப்படுகின்றது. முடிவு உற்பத்தியானது, அதன் உற்பத்தி மற்றும் களஞ்சியப்படுத்தும் நடைமுறைகளின் ஒவ்வொரு கட்டத்திலும் உற்பத்தியின் சுகாதாரம், உணவுப் பாதுகாப்பு மற்றும் தரக்கட்டுப்பாட்டுச் சோதனைகளுக்கு உள்ளாக்கப்படுகின்றது. நுகர்வோரை எட்ட முன்னர் உள்ளகரீதியான மற்றும் வெளிப்புற ஆய்வுகூடங்களின் தரக்கட்டுப்பாட்டு சோதனைகளுக்கும் அது உள்ளாக்கப்படுகின்றது.

இலங்கையிலுள்ள 21,000 பாற்பண்ணையாளர்களிடமிருந்து சேகரிக்கப்படுகின்ற புத்தம்புதிய, உயர் தரம் கொண்ட பாலை உபயோகித்து தயாரிக்கப்படுகின்ற *மைலோ* உடனடியாக பருகக்கூடிய உற்பத்தியானது, மகத்தான சொக்கிலேற்று மோல்ற்று சுவையை வழங்குவதற்கு, பொற்செழுமை மிக்க மோல்ற்று மற்றும் மிகச் சிறந்த கொக்கோ விதைகளிலிருந்து பெறப்படுகின்ற கொக்கோ ஆகியவற்றையும் மூலப்பொருட்களாகக் கொண்டுள்ளது. உலகெங்கிலும் நெஸ்லே நிறுவனத்தின்

பெயர்பெற்ற அதியுயர் தர நடைமுறைகளைப் பேணியவாறு, குருணாகலிலுள்ள நெஸ்லே நிறுவனத்தின் நவீன தொழிற்சாலையில் அது உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது.